ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2294/69 - 2022 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2022.08.26
2294/69 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் கெஸ்பேவ நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கெஸ்பேவ நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், கெஸ்பேவ நகர சபையின் 04 ஆம் இலக்க பெலென்வத்த வட்டாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட லலித் ரோஹண லியனகே என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான கெஸ்பேவ நகர சபையின் 04 ஆம் இலக்க பெலென்வத்த வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக பியுமதரா லியனகே என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

1A - G 37350 — 16 (2022/08)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

கெஸ்பேவ நகர சபையின், தெரிவத்தாட்சி அலுவலர் மாபா முதியன்சேலாகே சேன குமாரசிறி பண்டார மாபா ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு பியுமதரா லியனகே என்பவர் கெஸ்பேவ நகர சபையின் 04 ஆம் இலக்க பெலென்வத்த வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எம். எம். எஸ். கே. பண்டார மாபா,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கெஸ்பேவ நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
2022, ஓகத்து 26.

EOG 08- 272